

கோயம்புத்தூர் மாவட்டம், வ.உ.சி மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா இதழாளர் கலைஞர் குழுவின் சார்பில் இதழாளர் கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சி அரங்கத்தினை நேற்று முன்தினம் (18.10.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், விழாக் குழுத் தலைவர் / அமைச்சர் மு.பெ.சாமிநாதன் , இணைத் தலைவர்கள் – அமைச்சர் செஞ்சி. கே.எஸ். மஸ்தான் , அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் பாரதிய வித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் திறந்து வைத்து பார்வையிட்டார். அதுபோது விழாக் குழு உறுப்பினர் செயலர்– செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் த.மோகன் , மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, நாடாளுமன்ற உறுப்பினர் .பி.ஆர்.நடராஜன், இதழாளர் கலைஞர் குழுவின் உறுப்பினர்கள் .என்.ராம் (ஹிந்து நாளிதழ்) நக்கீரன் கோபால், பாபுஜெயகுமார்(டெக்கான் க்ரோனிக்கல் நாளிதழ்) அருண்ராம் (டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்) .கோவி.லெனின் (பத்திரிக்கையாளர்), .எம்.குணசேகரன்(எடிட்டர் சன் டிவி), செந்தில்வேலவன்(வேல்வீச்சு), மேயர் திருமதி. கல்பனா ஆனந்தகுமார், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

### கழகத் தகவல் தொழில்நுட்ப அணி விங் 2.0; இரு நாள் நிகழ்வு!

# தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் - உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

### தகவல் தொழில்நுட்ப அணிச்செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமை!

சென்னை, அக்.20-

விங் 2.0 தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் இருநாள் நிகழ்வு, சென்னை, ஷெனாய் நகர், செயின்ட் ஜார்ஜ் பள்ளி, விங்ஸ் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

**புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்:**

விங் 2.0 இன்று (அக். 20) முதல் நாள் மாலை 5 மணியளவில் நடைபெறும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு (ம) சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

தகவல்தொழில்நுட்பஅணி செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (ம) வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற உள்ளது. இதில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி இணைச்செயலாளர் ஆர். மகேந்திரன், மாநில ஆலோசகர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட 1200 நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

**சமூக வலைத்தள தன்னார்வலர்கள் சந்திப்பு:**

விங் 2.0 நாளை (அக்.21) இரண்டாம் நாள் காலை 10.30 மணியளவில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் சமூக வலைத்தள தன்னார்வலர்கள் சந்திப்பு நிகழ்வில் சிறப்புரையாற்றுகிறார். முகநூல், எக்ஸ் (ட்விட்டர்), இன்ஸ்டாகிராம், யூட்யூப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் திராவிட இயக்கக் கருத்தியல் சார்ந்து செயலாற்றும் தன்னார்வலர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

முனைவர் டி.ஆர்.பி. ராஜா தலைமையிலான இரு நாள் நிகழ்வில் செயலி வெளியீடு, இணையப் பயிற்சி, புத்தக வெளியீடு உள்ளிட்ட பல நிகழ்வுகள் சிறப்புடன் நடைபெற உள்ளன.

### மத்தியில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால்

# நாடு சர்வாதிகார நாடாக மாறும்

### காளையார் கோவில் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர் .பெரிய கருப்பன் பேச்சு

சிவகங்கை, அக்.20-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் நேற்று முன்தினம் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா காளையார்கோவில் தெப்பக்குளம் கீழ்கரையில் ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது.

கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம் மற்றும் 7000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது.

தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு ஜூன் 23 முதல் அடுத்த ஆண்டு ஜூன் 2024 வரை ஓராண்டுக்கு கொண்டாட உள்ளோம். கழக தலைவர் அறிவித்தவாறு பொதுக் கூட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பொதுக்கூட்டத்தினை மாநாடாக மாற்றும் வகையில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆரோக்கியசாமி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் சிறப்பான ஏற்பாடுகளை செய்ததற்கு மாவட்டக் கழகம் சார்பில் பாராட்டினைதெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நாம் எடுக்கும் விழா ஒவ்வொரு தமிழருக்கும் எடுக்கும் விழாவாகும். ஐந்து முறை முதல்வராக கலைஞர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட பணிகளை தமிழகத்திற்கு செய்துள்ளார். பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகம் துவங்கியபோது தேர்தலில் போட்டியிடாமல் இருந்தது. பின்னர் மக்கள் பிரச்னைகளை தேர்தலில் போட்டியிட்டு தீர்க்கமுடியும் என்ற அடிப்படையில் தேர்தலில் முதன்முறையாக போட்டியிட்டது. அதில் 15இடங்கள் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் 65இடங்களில் வெற்றிபெற்றது.

1967ல்கழகம் ஆட்சி அமைக்கப்பட்டது. முதல் முறையாக பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றார் அண்ணா அவர்கள் சிறப்பாக பணியாற்றினார். அவர் உடல் நலக் குறைவால் மறைவுற்ற பின் தலைவர் கலைஞர் அவர்கள் கழகத் தலைவராகவும் முதல்வராகவும் பொறுப்பேற்று ஐந்து முறை முதல்வராக திறம்பட பணியாற்றியுள்ளார்.

தந்தை பெரியாரின் கொள்கைகளை, பேரறிஞர் அண்ணாவின் லட்சியங்களை, தனது வாழ் நாள் வரை கடைப்பிடித்து அதை செயல்படுத்தி காட்டியவர் தலைவர் கலைஞர். முதல்வராக அவர்செய்த சாதனைகளை இந்திய கண்டத்தில் எந்த முதல்வரும் இதுவரை செய்ததில்லை. அத்தகைய சாதனைபடைத்த முதல்வராக நமது தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கி உள்ளார்கள். தனது 14 வயது முதல் 94 வயது வரை நமது மக்களுக்காகவும், மொழி, இனத்திற்காகவும்,தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

**திடீர் பாசம்!**

ஆட்சியில் இருந்தாலும் சரி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் உரிமைக்காக குரல்கொடுத்தவர். அவரால் மொழி இனம் பாதுகாக்கப்பட்டு வந்தது . மற்ற கட்சிக்கு இல்லாத சிறப்பு தி.மு.க.விற்கு உண்டு. திராவிடம் என்ற பெயரைச் சொல்லிக் கொள்ளும் அ.தி.மு.க. திராவிடத்தை விட்டு விட்டு பாஜகவிடம் அடிமை கட்சியாக மாறியது. பிரதமர் மோடி சி.ஏ.ஏ. வேளாண்மை சட்டம் உட்பட பல்வேறு மக்கள் விரோத சட்டங்களை கொண்டு வந்த போது பா.ஜ.க.வை அ.தி.மு.க. ஆதரித்தது. இதனால் அதிமுக திராவிடம் என்ற கொள்கையை கைவிட்டு விட்டது. இப்பொழுது பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்லும் அ.தி.மு.க.விற்கு திடீரென்று சிறுபான்மையினர் மீது பாசம் வந்துள்ளது.

சிறுபான்மை சட்டத்தை ஆதரித்து நடைமுறைக்கு கொண்டு வந்தில்அ.தி.மு.க விற்கு பங்கு உண்டு.இதை மக்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். தேர்தலுக்காக இத்தகைய அறிவிப்புகளை அ.தி.மு.க . செய்து வருகிறது. 9 1/2 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் பிரதமர் மோடி என்ன திட்டங்களை செய்தார் என்று கூறி வாக்கு கேட்க வாக்கு கேட்க முடியாது. கறுப்பு பணத்தை மீட்டு ஒவ்வொருவர் கணக்கில் ரூபாய் 15 லட்சம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்று அறிவித்தார். ரூபாய் 15 கூட வரவில்லை .ஒன்பது ஆண்டுகளுக்குமேலாகி விட்டது.

**ஒன்றிய அரசே காரணம்!**

ஆண்டுக்கு 2 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும் என்று மோடி சொன்னார்.அந்த வாக்குறுதி என்னவாயிற்று என்று தெரியவில்லை பெட்ரோல் டீசல் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அதற்கு காரணம் மோடி அரசுதான். விலைவாசி கடுமையாக ஏற்றத்துக்கு காரணம் ஒன்றிய அரசு தான் ஆகும். உலக அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்தும் பெட்ரோல் டீசல் விலையை குறைக்காமல் இருப்பதுமே விலைவாசி ஏற்றத்திற்கு காரணம் ஒன்றிய அரசே ஆகும்

இதற்கு முழுப்பொறுப்பு மோடி தான் ஏற்றிட வேண்டும். இன்னும் ஆறு மாதத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது

இந்த பாராளுமன்ற தேர்தல் நமது இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும். மோடி ஒன்பது ஆண்டு காலம் செய்த சாதனைகளில் ஏதும் சொல்ல முடியாமல் ஊழல் அதிகம் செய்துள்ளார். அதை மறைப்பதற்கு ஜாதி,மத, மோதல்கள், சிறுபான்மை இனத்தவர்மீது தாக்குதல்கள், நடைபெற்று வருகிறது. இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். சிறுபான்மை நலம் காக்கும் இயக்கம் தி.மு.க. ஒன்றுதான். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க. தேர்தலில் 50, 5 தேர்தல்வாக்குறுதிகளை அறிவித்தது.

இரண்டரை ஆண்டுகளில் 85 சதவாக்குறுதி களை நிறைவேற்றி உள்ளது . இதை நாம் மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். வீடுதோறும் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும். இதைத்தான் நம்முடைய முதல்வர் தளபதி அவர்களும் விரும்புகிறார்கள் .

நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் நாம் 39 தொகுதிகளிலும் வெற்றி பெறவேண்டும். நமது முதல்வரின் இரண்டரை ஆண்டு பொற்கால ஆட்சிக்கு தரும் சான்றிதழாக அமையும். தற்போது நாட்டில் சர்வாதிகார சூழ்நிலை நிலவுகிறது. மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் சர்வாதிகார நாடாக இந்தியா மாறிவிடும். எனவே நாம் கிராமங்கள் தோறும் சென்று இந்தியா கூட்டணி வெற்றிஅடைய கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரத்தை வலுப்படுத்துவதற்கும் தயாராக வேண்டும்.இதை முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் கூடத்தில் சபதம் ஏற்போம் என்று கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் . பெரியகருப்பன் பேசினார்.

கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலுமிருந்து 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் கலந்து கொண்டார்கள். பொதுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

## வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி

சென்னை, அக்.20-

வடகிழக்கு பருவமழை தொடங்க சாதகமான சூழல் தென் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், வட மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும் மழை பெய்திருக்கிறது. வருகிற 22ந் தேதி முதல் 25ந்தேதிக்குள் பருவமழை தொடங்க வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை விலகி, வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான சாதகமான சூழல் நிலவுகிறது. தற்போது வரை தென்மேற்கு பருவமழையால் மழை பெய்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை வெளுத்து வாங்கி வருகிறது. அதிலும் குறிப்பாக தென் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், வட மாவட்டங்கள

ஒரிரு இடங்களிலும் மழை பெய்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக, தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனையொட்டிய மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியிருப்பதாகவும், நாளை மறுதினம் (சனிக்கிழமை) காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற உள்ளதாகவும் ஆய்வுமையம் அறிவித்து இருக்கிறது.





கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், உருளைகுடி ஊராட்சி,பீக்கிலிபட்டி கிராமம் முதல் சங்கராபுரம் கிராமம் வரை திருநெல்வேலி நபார்டு நெடுஞ்சாலை கிராமப்புறச் சாலை திட்டத்தின் கீழ் ரூ.6 கோடியே 27 லட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணியினை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன் அடிக்கல் நாட்டி பணியினை துவக்கி வைத்தார். நிகழ்விற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்கண்டேயன் தலைமை வகித்தார். கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கருணாநிதி,ஊராட்சி மன்ற தலைவர் பீக்கிலிபட்டி முருகேசன், கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதகண்ணன் புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, தலைமை செயற்குழு உறுப்பினர் ராதாகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியத்தில் வாக்குச்சாவடி பாகமுகவர் (BLC) ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் சிறப்புரை!

குமரி, அக்.20-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட தேரேகால்புதூர், இராமபுரம், நல்லூர், இரவிபுதூர் மற்றும் குலசேகரபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள 17 வாக்குச்சாவடிகளில் 100 வாக்காளர்களுக்கு 1 முகவர் என்று நியமிக்கப் பட்ட வாக்குச்சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டம் 18.10.2023, புதன்கிழமை அன்று மாலை 4 மணிக்கு நல்லூர், விஸ்வா திருமண மண்டபத்தில் வைத்து அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். மதியழகன் தலைமையில், மாவட்ட துணை செயலாளர் எம்.சோமு முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர்- நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களின் (BLC) வருகை பதிவேடு தனித்தனியே ஆய்வு செய்யப்பட்டது. கூட்டத் தில் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வெ.நம்பி, ஊராட்சி தலைவர்கள், அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2), வாக்குச்சாவடி பாக முகவர் குழு உறுப்பினர்கள் (BLC) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பல இன்னல்களை நமக்கு தந்து கொண்டிருக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்தும் விதமாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் இன்றே அயராது பாடுபட வேண்டும் எனவும் மேலும் களப்பணியை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

28.10.2023, சனிக்கிழமை அன்று குமரிக்கு வருகை தரும் மாநில இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கவும், அதன்பிறகு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சி களிலும் ஒன்றியத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

## “மகளிர் உரிமை மாநாடு மட்டற்ற மகிழ்வில் தமிழ்நாடு”

மாபெரும் மகளிர் மாநாடு
மாண்புற நடந்தது சிறப்போடு...
கோபுரம் போலே உயர்ந்து
குன்றென நின்றது தமிழ்நாடு...

தளபதி முன்னே வழிகாட்ட - மகளிர்
தலைவியாய் கனிமொழி ஒளியூட்ட
விளக்காய் இந்திய நாட்டிற்கே நல்
வெளிச்சம் தந்திட்ட மாநாடு...

அன்னை சோனியா சொன்னதுபோல்
அனைத்திற்கும்வழிகாட்டிதமிழ்நாடே...
என்னே மாநாட்டுப் பெருமை...
ஏற்பாடு அனைத்துமே அருமை...

இந்தியா கூட்டணி வென்றால்தான்
இமயமாய் ஒளிரும் இந்தியா...
சிந்தனை செயல்களை ஒன்றிணைக்க
சிறப்புற முனைவார் நம் தளபதி

எதிரியை வெல்வது ஒன்றுதான்
இப்போது நமது இலட்சியம்
நிதானம் காட்டி செயல்பட்டால்
நிலைக்கும் வெற்றி நிச்சயம்!...

சாத்தான்களை வீழ்த்தி வென்றிட
சரியான தருணம் இதுவே
பூத்திட வேணும் வெற்றி
காத்திட வேணும் இந்தியாவை...

சிறுசிறு வேற்றுமை இருந்தாலும்
சிந்தனை நமக்கு ஒன்றுதான்...
நேரிய முறையில் உழைத்து
நேர்மை வெற்றியைப் பெற்றிடுவோம்!

கவிஞர்
இ.ரவி பாரதி





மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கருங்காலக்குடி அரசு பள்ளியில் பயிலும் 17 மாணவ – மாணவியர் பள்ளி முடிந்து வீட்டுக்குச் செல்லும் வழியில் சரக்கு வாகனத்தில் பயணம் செய்த போது எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு காயம் அடைந்தனர். விபத்தில் காயம் அடைந்தவர்களை மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், பெரியபுள்ளான் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.